இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
சட்டமாணிப் பட்டப்படிப்புத் திட்டம்
இறுதிப் பரீட்சை 2008/2009
**LWU 2314** – அரசியலமைப்புச்சட்டம் 11
காலம்: மூன்று(03) மணித்தியாலங்கள்

திகதி: 27.03.2009 நேரம்: மு.ப 09.30 – பி..ப 12.30

தெளிவற்ற கையெழுத்துக்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்

<u>பகுதி 1 – அடிப்படை உரிமைகள்</u>

இப்பகுதியில் இருந்து குறைந்தது இரண்டு(02) வினாக்களுக்கேனும் விடை தருக.

1. திரு. சில்வா பிறவியிலேயே வாய்பேசமுடியாதவர் என்பதுடன் அவரது தேர்ந்தெடுக்கப்பட்ட தொடர்பாடல் மார்க்கம் சைகை மொழியாகும். பல சுகயீனங்களால் துன்பப்பட்ட அவர் சிலநாட்கள் கொழும்பு பொது வைத்தியசாலையில் பரிகாரம் பெறுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. திரு. சில்வாவுடன் உரையாடுவதற்கு சைகைமொழி உரை பெயர்ப்பாளர் ஒருவரின் சேவையை கொழும்பு வைத்திய சாலை ஒரு போதும் பெறவில்லை. உரை பெயர்ப்பாளர்கள் இல்லாமையானது வைத்தியருடனும் மற்றும் ஏனைய வைத்திய சேவையை வழங்குபவர்களுடனும் உரையாடுவதற்கான தனது ஆற்றலை வலுவிழக்கச் செய்திருந்ததோடு அது நோயை பிழையாக இனங்காண்பதற்கும் செயற்திறனற்ற பரிகாரம் வழங்குவதற்குமான ஆபத்தை அதிகரித்ததெனவும் அவர் வாதாடினார். சைகை மொழிப்பெயர்ப்பாளர் ஒருவரை வழங்க தவறியமையானது வைத்திய பரிகாரம் பெறுவ்து தொடர்பில் தனக்குள்ள சமத்துவத்திற்கான உரிமையை மீறியுள்ளது எனும் விளம்பலை நாடி திரு சில்வா விண்ணப்பம் ஒன்றை தாக்கல் செய்தார்.

   இவ்விடயத்தை தீர்மானிக்கும் உச்ச நீதிமன்ற நீதிபதி நீர் என எண்ணி உமது தீர்ப்பை பொருத்தமான அதிகாரத்துடன் தருக.

2. பொதுவாக அரசாங்க திணைக்களங்களுடன் சங்கமித்திருக்கும் கண்டிப்பான, மெதுவான நடைமுறைகளும் அத்தகைய மெதுவான நடைமுறைக்கு இயற்கையாகவே கட்டுண்ட அநாவசியமான சட்ட திட்டங்களும் அரசாங்கத்தை பகிரங்க கூட்டுத்தாபனங்கள் எனும் கருவிகளுக்கு இத்தகைய எண்ணிக்கையிலான வர்த்தக மற்றும் தொழித்துறை உள்வாங்குகையை மேற்கொள்ளும் போது தொழில்சார் தகுதியும் உயர்ந்த விஷேடத்துவமும் தொழிநுட்ப தன்மையையும் உள்ளடக்க வேண்டும் என நிர்பந்திக்கிறது. ஆனால் இந்த கூட்டுத்தாபனம் எனும் கருவியை கொண்டு நடத்தும் போது, அதன் அங்கங்களை கௌரவப்படுத்தவும் பலப்படுத்தவும் மற்றும் உயர்த்தவும் அதிகாரப்பூர்வமாக கட்டுண்ட அரசாங்கமானது, அடிப்படை உரிமைகள் தொடர்பில் அதன் அரசியலமைப்பு கடப்பாடுகளில் இருந்து தாராள போக்கை அனுமதிக்கமுடியாது.

   Per Athukorale J. in
   ***<u>Rajaratne</u> Vs .<u>Air Lanka Ltd. And Others</u>*** *(1987) 2 Sri L R 128*

   மேற்தரப்பட்ட கூற்றின் பின்னணியில் "நிருவாக அல்லது நிறைவேற்றுத்துறை செயற்பாட்டில் எல்லை மற்றும் ஏற்புடைமையை 1978ம் ஆண்டு இலங்கை அரசியலமைப்பில் உறுப்புரை 126ற்கு ஏற்ப ஆராய்க.

3. 'X' நாட்டின் புதிய ஜனாதிபதியான திரு தொம்சன் இஸ்லாம் சமூகத்தை சேர்ந்த பிரஜைகளுக்கு தமது சமயத்தை விட்டுவிடும்படியும் அல்லது தமது தொழில்களில் இருந்து நீக்கத்தைப்பெறும் படியும் அறிவித்தார். மேலும் அவர் பாதுகாப்புக் காரணங்களுக்காக முஸ்லீம் பெண்கள் தமது தலையை மூடுவதையும் தடைசெய்தார். இவ்விதிகளால் பாதிக்கப்பட்ட ரியாஸ் மற்றும் நௌபா ஆகியோர் முஸ்லீம்களாவர்.

த டெய்லி லீடர் எனும் செய்தித்தாள் பெரும்பாலும் ஜனாதிபதியின் கருத்துக்கு முரணாக தொடர்ந்து இவ்விடயம் பற்றி கட்டுரைகளை பிரசுரித்து வந்தது. தற்போது அரசாங்கம் இப்பத்திரிகையை தடைசெய்ய முயற்சி செய்கின்றது. செய்தித்தாள் அலுவலர்கள் அரசாங்கத்திற்கு எதிராக சுவரொட்டிகளையும் பதாதைகளையும் ஏற்பாடு செய்து எதிர்ப்பில் ஈடுபட்டபோது காவல்துறையினர் அலுவலர்களை தாக்கி காயப்படுத்தியதுடன் அவர்களது பதாதைகளையும் சுவரொட்டிகளையும் நாசம் செய்தனர்.
கீழ்வரும் கட்சிக்காரரின் உரிமைகளை ஆராய்க.

(அ) ரியாஸ் மற்றும் நௌபா
(ஆ) த டெய்லி லீடர் செய்தித்தாளின் இதழாசிரியர் மற்றும் வாசகர்கள்.

'X' நாட்டின் அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகள் அத்தியாயமும் இலங்கையின் (1978) அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகள் அத்தியாயமும் ஒத்தவை என கருதுக.

4. அரவிந்த குருணாகலில் இருந்து தனது இருப்பிடமான கடுவலவிற்கு தளபாடங்களை எடுத்துச்செல்லும் போது அவன் காவல்துறை சோதனைச் சாவடி ஒன்றில் நிறுத்தப்பட்டான். காவல் துறையினர் ட்ரக் வண்டியில் தேடுதல் செய்ததுடன் அவர்களது வேண்டுகோளுடன் அவன் இணங்கா விட்டால் அவன் சட்டவிரோதமாக தளபாடங்களை ஏற்றிச் சென்றமைக்கு வழக்குத் தொடரப்படுவான் என அரவிந்தவை அச்சுறுத்தி 10,000 ரூபாவை லஞ்சமாக கேட்டனர். அரவிந்த பணத்தை கொடுக்க மறுத்தான். அப்பாவித்தனத்தின் எதிர்ப்புடன் அவன் அதிகாரியிடம் தளபாடம் எடுத்துச்செல்வதற்கான அனுமதிச் சீட்டை காட்டிய போதிலும் காவல் துறையினர் அவனை கடுமையாக தாக்கி கைது செய்ததுடன் அவனையும் ட்ரக் வண்டியையும் காவல் நிலையத்திற்கு எடுத்துச் சென்றனர். வயரால் தாக்கி காயப்படுத்தியதால் அது அவனுக்கு கடும் வேதனையை எற்படுத்தியதுடன் இறுதியில் அவன் நீதவான் முன் ஆஜர்படுத்தப்படாது தடுத்துவைக்கப்பட்டான். அவன் உதவியைநாடி கத்தியதுடன் தண்ணீர் கேட்டபோது காவல்துறை அதிகாரி தண்ணீருக்குப் பதிலாக ஒரு கோப்பை அசிட்டை கொடுத்தார். அரவிந்த அதனைக் குடிக்க மறுத்த போது பலவந்தமாக அவனது வாயில் அசிட் ஊற்றப்பட்டது. இதன் விளைவாக அன்றிரவு அவன் இறந்தான்.

அரவிந்தவின் மனைவி நிர்மலா காவல்துறை அதிகாரிக்கு எதிராக அடிப்படை உரிமை மீறல் வழக்கொன்றை தாக்கல் செய்ய விரும்புகினறாள். நிர்மலாவிற்கு அறிவுரை செய்க.

## பகுதி II – அதிகாரப்பகிர்வு

இப்பகுதியில் இருந்து குறைந்தது இரண்டு(02) வினாக்களுக்கேனும் விடைதருக.

5. "தமது விவகாரங்களை நிருவகிக்கும் நோக்கத்திற்காக தமது வாக்களிக்கும் உரிமையைப் பிரயோகித்து ஒவ்வொரு மாகாண மக்களும் தமது பிரதிநிதிகளை தெரிவு செய்கின்றனர். சபையின் நம்பிக்கையின் ஆதிக்கம் செலுத்தக்கூடிய பிரதிநிதிகளில் சிறந்தவரை பிரதம மந்திரியாக தெரிவுசெய்து அதன் மூலம் மாகாண மக்களின் விருப்புகளுக்கு செயற்திறனை வழங்க ஆளுநருக்கு தற்துணிபதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இத் தற்துணிபதிகாரமானது தனிப்பட்ட அல்லது அரசியல் போன்ற ஏனைய நோக்கங்களுக் வழங்கப்படவில்லை."

   விமர்சிக்குக.

   Per. G.P.S De Silva. CJ.in
   ***Premachandra VS.Major Montague Jauyawickrema and another***
   *(provincial governors' case)* (1994) s Sri L R 105

6. சட்டவாக்க அதிகாரத்தின் பிரயோகம் தொடர்பில் 13வது திருத்த வழக்கின் பெரும்பான்மை தீர்மானத்திற்கமைய முழுமையான அல்லது சுதந்திரமான அதிகாரமானது மாகாண சபைகளுக்கு வழங்கப்பட வில்லை.

   இக் கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா? தொடர்புடைய அரசியலமைப்புப் பிரிவுகளையும் தீர்க்கப்பட்ட வழக்குகளையும் தருவதன் மூலம் உமது விடைக்கான காரணங்களைத் தருக.

7. அரசியலமைப்பின் 13வது திருத்தத்தின் கீழ் நீதிமன்ற நடவடிக்கை அல்லது செயற்பாட்டின் மீது மாகாண சபைக்கு கட்டுப்பாடு இல்லை எனும் விமர்சனம் ஒன்று நிலவுகின்றது. எப்படியிருப்பினும் 13வது திருத்தம் மாத்திரமே பகிரப்பட்ட அதிகாரத்தை மீள் ஒழுங்குபடுத்தி, தாமதத்தையும் செலவையும் குறைத்து நீதியை பிரஜைகளின் வீட்டுக்கு அருகில் கொண்டு வந்துள்ளது.

8. கீழ்வருவனவற்றில் எவையேனும் இரண்டிற்கு(02) சிறுகுறிப்பு வரைக.

   (அ) உள்ளூராட்சி சபை எதிர் அதிகாரப்பகிர்வு
   (ஆ) 1978ம் ஆண்டின் அரசியலமைப்பில் அரசியலமைப்பபிமானியம்.
   (இ) மாகாணப் பொதுச்சேவை
   (ஈ) 1978ம் ஆண்டு அரசியலமைப்பில் உறுப்புரை 2 மற்றும் அரசியலமைப்புக்கான 13வது திருத்தம்.

(பதிப்புரிமையுடையது)